செ.வெ.எண்:: 876 நாள்:·07.10.2010.

<u>செய்தி வெளியீடு – 7.10.2010</u>

முதலமைச்சர் கலைஞர் அவர்கள், மேட்டூர் அணையில் இருந்து புள்ளம்பாடி மற்றும் புதிய கட்டளை மேட்டு வாய்க்காலின் பாசனப் பகுதிகளுக்கு 14.10.2010 முதல் பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விட இன்று (7.10.2010) ஆணையிட்டுள்ளார்.

இதனால் திருச்சி, தஞ்சாவூர், அரியலூர் மாவட்ட விவசாயிகள் பயன் பெறுவார்கள். புள்ளம்பாடி வாய்க்கால் மூலம் சுமார் 22 ஆயிரம் ஏக்கர் நிலங்கள், புதிய கட்டளை மேட்டு வாய்க்கால் மூலம் 20 ஆயிரத்து 662 ஏக்கர் நிலங்களும், ஆக மொத்தம் 42 ஆயிரத்து 662 ஏக்கர் நிலங்கள் பயன்பெறும்.

* * *